**செய்தி வெளியீடு எண்: 41/2025** **நாள்: 16.05.2025**

## பத்திரிக்கைச் செய்தி

## சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் "மெட்ரோ இரயில் அமைப்புகளில் I-Metro's Rolling Stock Working Group-இன் முதலாவது கூட்டத்தை நடத்தியது"

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின், Rolling Stock Working Group-இன் முதலாவது கூட்டம் இன்று (16.05.2025), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகம் மெட்ரோஸில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நாளையும் (17.05.2025) இந்த கூட்டம் நடைபெறவுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் ஆதரவுடன் நடைபெற்ற முதல் Rolling Stock Working Group கூட்டம், I-Metro உடன் இணைந்து இந்தியா முழுவதும் உள்ள மெட்ரோ அமைப்புகளிடையே மெட்ரோ இரயில் அமைப்புகளின் நலனுக்காகவும், பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள், பராமரிப்பு உத்திகள் போன்றவற்றைப் பரிமாறிக் கொள்வதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று (16.05.2025) தொடங்கிய கூட்டத்தில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப., இயக்குநர் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) திரு. மனோஜ் கோயல், Rolling Stock Working Group-இன் தலைவர் மற்றும் தலைமை பொது மேலாளர் (மெட்ரோ இரயில், சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு) திரு. ஏ.ஆர். ராஜேந்திரன், தலைமை ஆலோசகர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) திரு. கோபிநாத் மல்லையா, ஆலோசகர் (மெட்ரோ இரயில் இயக்கம்) திரு. எஸ். ராமசுப்பு ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், டெல்லி மெட்ரோ, பெங்களூர் மெட்ரோ, கொச்சி மெட்ரோ, உத்தரப் பிரதேசம் மெட்ரோ, கொல்கத்தா மெட்ரோ, மகாராஷ்டிரா மெட்ரோ, ஜெய்ப்பூர் மெட்ரோ, குஜராத் மெட்ரோ, மற்றும் மும்பை மெட்ரோ உள்ளிட்ட பல்வேறு இந்திய மெட்ரோ இரயில் அமைப்புகளைச் சேர்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் பங்கேற்றனர்.

இந்த முயற்சி, குறிப்பாக Rolling Stock துறையில், மெட்ரோ இரயில் தொழில்நுட்பத்தில் ஒருங்கிணைந்த மேம்பாடு, செயல்பாடு மற்றும் பராமரிப்பை முன்னேற்றுகிறது. இது சென்னை மெட்ரோ இரயிலுக்கு முக்கியமானதாகும், ஏனெனில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 2-ஆம் கட்டத்தின் 1-ம் நிலையை முடித்து, 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மெட்ரோ இரயில் செயல்பாட்டை தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இக்கூட்டத்தில் பெறப்படும் அனுபவங்கள், கட்டம் 2

செயல்பாடுகளில் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி அமைப்புகளுடன் திறனை அதிகரிக்க உதவும். இதன்மூலம் பொதுமக்களுக்கு மேலும் நம்பகமான சேவையை உறுதி செய்யும்.

இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட முக்கியமான தலைப்புகள்:

- மெட்ரோ இரயில் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளில் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக் கொள்ளுதல்
- பராமரிப்பு நடைமுறைகள் மற்றும் மறுசீரமைப்பில் புதுமைகள்
- பழமையான உபகரணங்களுக்கான மேலாண்மை (Obsolescence Management)
- விற்பனையாளர்கள் மேம்பாடு, உதிரிபாகங்களை உள்நாட்டு உற்பத்தி மற்றும் உள்ளூர்மயமாக்குதல்
- சொத்துகளின் மேலாண்மை மற்றும் மெட்ரோ இரயில் பராமரிப்பில் AI மற்றும் தரவினை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல்
- மேம்பட்ட பராமரிப்பு முறைகள் மற்றும் life-cycle-ஐ பின்பற்றி செலவினத்தை மேம்படுத்தும் உத்திகள்
- மெட்ரோ இரயில் அமைப்புகளில் பொதுவான இலக்குகள், சவால்கள் மற்றும் முக்கிய சாதனைகளை அடையாளம் காணுதல் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த கூட்டம், மெட்ரோ இரயில் அமைப்புகளில் தங்களது முக்கிய யுத்திகளை ஒருமுகப்படுத்தவும், தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், மெட்ரோ இரயில் செயல்பாடு மற்றும் பராமரிப்பில் நம்பகத்தன்மை, செயல்திறன் மற்றும் பயணிகளின் வசதியை மேம்படுத்துவதற்கான புதிய யுத்திகளை ஆய்வு செய்யும் யோசனைகளையும் வழங்குகிறது.

இந்தியாவில் மேலும் ஒருங்கிணைந்த, தொழில்நுட்ப முறையில் முன்னேறிய மற்றும் சூழலுக்கு உகந்த மெட்ரோ அமைப்பை உருவாக்கவும் பராமரிக்கவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது தலைமைப்பங்கையும் அர்ப்பணிப்பையும் மீண்டும் இக்கூட்டத்தில் உறுதிப்படுத்துகிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**